# சூடான வெய்யிலில் இருந்து தப்புங்கள்!

## கோடை காலத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கான யோசனைகள்

- ✓ நிறைய தண்ணீர் குடியுங்கள்
- ✓ வெயில் கடுமையாக இருக்கும்போது எப்போது வெளியே போக வேண்டுமென்பதைத் திட்டமிடுங்கள் - காலை 11 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வெளியே செல்வதைத் தவிருங்கள்.
- ✓ உடல் ரீதியாக செய்யும் வேலைகளைக் குறையுங்கள்
- ✓ மது மற்றும் சூடான அல்லது இனிப்பு மிக்க பானங்களைத் தவிருங்கள்
- ✓ குறிப்பாக, தனியாக வசிக்கும் வயதான நண்பர்கள், அயலவர்கள் மற்றும் உறவினர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று அவ்வப்போது பாருங்கள்
- ✓ பருத்தி போன்ற இயற்கையான இழைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட வெளிர் நிறமான தொள-தொளப்பாய் இருக்கும் உடுப்புகளை அணியுங்கள்
- ✓ குளிர்ந்த நீரில் நீராடுங்கள்
- ✓ சன்னல்களுக்கு மறைப்புகள் (shades) மூடும் படுதாக்கள் (shutting curtains) ஆகியவற்றை இடுங்கள், மற்றும் பாதுகாப்பாக இருந்தால் குளிர்ந்த காற்று உள்ளே வருவதற்காக இரவு நேரத்தில் சன்னல்களைத் திறந்து வையுங்கள்
- ✓ உங்கள் வீட்டில் 'குளுகுளு காற்று' வசதி (air-conditioner) இருந்தால் அது பழுதில்லாமல் சரியாக இயங்கக் கூடிய நிலையில் உள்ளதா என்று தேவை எழுவதற்கு முன்பாகவே பாருங்கள்
- ✓ 'குளுகுளு' வசதி உங்கள் வீட்டில் இல்லை என்றால், நூலகம், அங்காடி அல்லது திரையரங்கம் போன்ற குளுகுளுப்பான இடம் ஒன்றில் சிறிது பொழுது போக்குங்கள். நடுப் பகல் வேளையில் நீங்கள் வெளியே வெய்யிலில் இருக்காதவாறு, குளுகுளுப்பான இடம் ஒன்றிற்கு நேரத்தில் செல்ல முயற்சியுங்கள்

**ஆங்கிலம் புரிந்துகொள்வதில் உங்களுக்கு சிரமம் இருப்பின், 'மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை' (Translating and Interpreting Service) யை 131 450 எனும் இலக்கத்தில் அழையுங்கள்**

NSW GOVERNMENT | Health

TAMIL

## 'அனல் காற்று அல்லது வெயில் தாக்க' (heat stroke) த்தின் அறிகுறிகள் யாவை?

- கிறுகிறுப்பு
- கடும் தாகம்
- மனதை ஒருநிலைப்படுத்த இயலாத குழம்பிய நிலை
- தலைவலி
- வரண்ட சருமம்
- குமட்டல் அல்லது வாந்தி
- மயக்கமுற்று விழல்
- சுயநினைவு இழத்தல்

## யாருக்காவது இந்த அறிகுறிகள் இருந்தால்:

- குளுமையான இடம் ஒன்றிற்கு அவரை எடுத்துச் செல்லுங்கள்
- குளிர்ந்த நீரால் அவருக்கு ஒத்தடம் கொடுங்கள்
- சுயநினைவுடன் இருந்தால், தண்ணீர் அருந்துமாறு அவரை ஊக்குவியுங்கள்
- '000' எனும் இலக்கத்தை அழைத்து அவசரசிகிச்சை வாகனம் வேண்டுமெனக் கேளுங்கள்

**வெயில் நேரத்தில் பாதுகாப்பாக இருப்பது எப்படி என்பது குறித்து மேலதிகமாய்த் தெரிந்துகொள்ள www.health.nsw.gov.au அல்லது www.mhcs.health.nsw.gov.au எனும் வலைத்தளத்திற்கு செல்லுங்கள்**

© NSW Health November 2010